Registered as a Newspaper

AL 90
SAT, SUN
மரியதாஸ் 3-4
சின்னத்தம்பி 4-5
தேவா 5-6
Niru Tuition CENTRE, KONDAVIL.

# உதயன்

விலை ரூ 2/-

90 ஒளியியல்
சனி, ஞாயிறு- 9-10
சௌந்தி
89 பௌதிக இரசாயனம்
பிரிவு 4.5-5.5
செல்வா
90 பொது இரசாயனம்
சனி, ஞாயிறு 8-9
NIRU TUITION CENTRE, Kondavil.

மடல்: 4 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ கார்த்திகை மீ 21 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ற. ஆகிர் பிறை 25 ( 06 - 12 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 9

## திருமலைக் கிராமங்களில் தமிழர் மீளக் குடியமர்வு

திருகோணமலை, டிச 6
இராணுவ நடவடிக்கை காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்க் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமது பகுதிகளில் மீண்டும் குடியமரத் தொடங்கியுள்ளனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக வேறு கிராமங்களிலும் நகரப் புறங்களிலும் அகதிகளாக இருந்த மக்கள் கடந்த மாதம் முதல் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை குச்சவெளி, திரியாய்ப் பகுதிகளில் மூடப்பட்டிருந்த அரச அலுவலகங்களும் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன. (ஓ-10)

## அரச ஆதரவாளர் நால்வர் சுட்டுக்கொலை!

கொழும்பு, டிச 6
தென் பகுதியில் நேற்று முன்தினம் ஆளும் கட்சி ஆதரவாளர்கள் நால்வர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பொலன்புர என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பத்தேகம என்னுமிடத்தில் தென் மாகாண சபை உறுப்பினர் எம். ஆர். பியசிறி என்பவர் தீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து உயிர்தப்பினார்

### பொதுத் தேர்தலில் போட்டியிட

## கிழக்கில் புதிய கட்சி தோற்றுவிக்கப்படுமா?

கொழும்பு, டிச 6
எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கிழக்கு மாகாணத்தில் புதிய அரசியல் கட்சி ஒன்று தோற்றுவிக்கப்படுமா?

ஈ. பி. ஆர். எல். எவ். ஈ. என். டி. எல். எவ். ஆகிய இயக்கங்களின் ஆதரவுடன் ஒரு கொடியின் கீழ் இப்புதிய அரசியல் கட்சியை அமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தகவலறிந்த வட்டாரங்களை ஆதாரங்காட்டி கொழும்பு ஆங்கிலத் தினசரி 'த ஐலண்ட்' நேற்று செய்தி ஒன்றை வெளியிட்டது.

புதிய அரசியல் கட்சிக்கு திரு. சாம்தம்பிமுத்து தலைமை வகிக்கலாம் என்று கூறப்படுகிறது.

''புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதற்கு மேல் சொல்லக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகள் இல்லை''—

—இப்படி திரு. சாம் தம்பிமுத்து தெரிவித்தார் என்றும் 'த ஐலண்ட்' செய்தி தெரிவித்தது. (ஓ-எ)

## பதினொரு தீவிரவாதிகள் மற்றொரு குழுவினால் கொலை

கொழும்பு, டிச 6
தென் மாகாணத்தில் 11 தீவிரவாதிகள் இனந்தெரியாத இன்னொரு குழுவினால் நேற்று முன்தினம் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

மாத்தறை, அம்பாந்தோட்டை பகுதிகளில் 6 பேரும் திஹெகடவில் 5 பேரும் இப்படி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் 20 வயதான விவசாயி உதயசிறி என்பவர் நேற்று இனந்தெரியாத நபர்களினால் கொல்லப்பட்டார். (ஓ-எ)

### கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட

## வெளியூர்த் தபால்கள் நேற்றுவிநியோகிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், டிச. 6
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட தபால்கள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

நீண்ட நாட்களுக்குப் பிறகு யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் உள்ளூரிலுள்ள தமது உறவினர்கள் நண்பர்களிடமிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலுள்ள உறவினர், நண்பர்களிடமிருந்தும் வந்த கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

கொழும்பிலிருந்து மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு எப்போது தபால் பொதிகள் வந்துசேரும் என்பதுபற்றித் தகவல் எதுவும் புதிதாக வந்து சேரவில்லை.

வடபகுதிக்கு அடுத்த தபால்பொதிகளை எப்போது அனுப்புவது என்பதுபற்றி கொழும்பிலுள்ள உயரதிகாரிகளே முடிவு செய்வார்கள் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ ஐ-10)

### சுபநேரம்

6 - 12 - 1988
கார்த்திகை 21
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10-47 முதல் 12-17வரை
ராகுகாலம்:-
3-17 முதல் 04-47வரை
இவை பகலுக்கும் இரவுக்கும்பொருந்தும்.
பிரதோஷ விரதம்

### நேற்றைய பதவிப்பிரமாண வைபவத்தில்

# முஸ்லிம் காங்கிரஸ் பங்கு பற்றவில்லை

## புறக்கணிப்பு நோக்கம் இல்லை என டிக்ஸிற்றிடம் அஷ்ரப் விளக்கம்

கொழும்பு, டிசம்பர். 6
வடக்கு —கிழக்கு மாகாண சபைக்கான பதவிப்பிரமாண வைபவம் நேற்றுத் திருகோணமலையில் நடைபெற்றபோது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை.

இதனை அடுத்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற்றைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புறக்கணிக்கமாட்டாது என்று இச்சந்திப்பின்போது இந்தியத் தூதர் ஜே. என், டிக்ஸிற்றுக்கு உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை திருகோணமலை நகர மண்டபத்தில் நடந்த மாகாண சபை உறுப்பினர்கள் கலந்துகொண்ட பதவிப்பிரமாண நிகழ்ச்சியில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தெரிவு செய்யப்பட்ட 17 உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை, பதவிப் பிரமாணம் அதனால் அவர்களுக்குச் செய்துவைக்கப்படவுமில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணசபையை முஸ்லிம் காங்கிரஸ் பகிஷ்கரிக்கப் போகிறதா? என்ற கேள்வி இதனால் கொழும்பு வட்டாரங்களில் எழுந்தது.

அதைத் தொடர்ந்தே அஷ்ரப் — டிக்ஸிற் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. (இ-எ)

## 17 இடங்களுக்கும் புதியவர்கள் நியமனமா?

கொழும்பு, டிச 6
வடக்கு- கிழக்கு மாகாண சபைக்கு தெரிவான 17 இடங்களுக்கும் புதியவர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமிக்க விருக்கிறது.

அதன் காரணமாகவே நேற்று திருமலையில் நடந்த வடக்கு- கிழக்கு மாகாணசபை அங்குரார்ப்பணக்கூட்டத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 17 உறுப்பினர்களும் சமுகமளிக்கவில்லை என்று பி. பி சி. அறிவித்தது.

தெரிவான முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் அனுபவம் வாய்ந்தவர்கள் இல்லை என்றும்— அவர்களின் இடத்துக்கு முக்கியமான, படித்தவர்களை நியமிக்க காங்கிரஸ் திட்டமிட்டு நடவடிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மின் கோபுரம் சேதம்

கொழும்பு, டிச 6
அம்பாறை மாவட்டத்தில் நேற்று உயர் மின் கோபுரம் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டதாகத் தெரிகிறது. (ஓ-எ)

## 54 உறுப்பினர்கள் மட்டும் பதவிப் பிரமாணம்

கொழும்பு, டிச. 6
வடக்கு — கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் நேற்றுக் காலை திருகோணமலையில் ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்ன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

54 உறுப்பினர்களே நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

மாகாண சபைத் தலைவராக திரு ராஜநாரியரும் உப தலைவராக திரு. கணேசமூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டனர்.

''மக்களுக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அளித்த உறுதி மொழிகளை நிறைவேற்ற நான் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவேன்.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சிக்கு நான் சகல உதவிகளையும் வழங்குவேன்'' — இப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுகளின்விவரங்கள்

கொழும்பு, டிச. 6
வடக்கு — கிழக்கு மாகாண சபையின் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சுக்களின் விவரங்கள் வருமாறு:-

1. முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள்.
சட்டம்-ஒழுங்கு, கல்வி உள்ளூராட்சி, வீடமைப்பு, பொதுக் கட்டடங்கள், கூட்டுறவுத்துறை, கலாச்சாரத்துறை.

2. திரு. கிருபாகரன்; நிதி, கடற்றொழில் அமைச்சர்.

3. திரு. தயான் ஜெயதிலக டி. சில்வா:- திட்டமிடல், இளைஞர் விவகார அமைச்சர்.

4. திரு சி. எம். கணேசலிங்கம்;
புனர் வாழ்வு, காணி

(4-ஆம் பக்கம் பார்க்க)

### நான்கு பக்கங்களே

கொழும்பு — யாழ் வாகனப்போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல்களால், யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் தாள் தட்டுப்பாடும், விலை உயர்வும் உண்டாகி உள்ளன.

மின்சாரச் சீர்கேடு, எரிபொருள் பற்றாக்குறை என்பன வேறு.

முன்கண்டகாரணங்களை முன்னிட்டு இன்றைய உதயன் நான்கு பக்கங்களுடன் வெளியிடுகிறோம்.

நிலைமையை அனுசரித்து வாசக நேயர்களை எம்மோடு ஒத்துழைக்குமாறு அன்புகொண்டு வேண்டுகிறோம்.

நிர்வாகிகள்

### முச்சந்தி முரளி



உவர் தர்மிஷ்டர் பதவியை விட்டு போக முன்னம் உப்பிடியான சில நல்லவிஷயங்களை செய்ய யோசிச்சிட்டார் போலை......!

## பஸ்களில் பயணிகள் நெருக்கடி

யாழ்ப்பாணம், டிச. 6
சமீபத்திய நெருக்கடிகள் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புசெல்லும் தனியார் பஸ்களின்தொகை குறைந்துவருகிறது.

இதனால் கொழும்பு செல்லும் பஸ்களில் பிரயாணிகள் நெரிசல் காணப்படுகிறது.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புத் தேடிச் செல்பவர்களும் இதில் கணிசமான அளவு அடங்கிஉள்ளனர். (இ-10)

## 2 ஆயிரம் கைதிகளை விடுவிக்க அரசு முடிவு

அவசரகாலச் சட்டத்தின் கீழ் சிறு குற்றச்செயல்களுக்காக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சுமார் 2 ஆயிரம் கைதிகளை விடுவிக்க அரசு முடிவு செய்து உள்ளது.

இது சம்பந்தமாக நீதி அமைச்சர் போல் பெரேரா செய்த சிபார்சை ஜனாதிபதி முன்னர் ஏற்றுக் கொண்டிருந்தார் என்பது தெரிந்ததே.

அவர்களை விடுவிக்கும் உத்தரவுகளை வழங்கும் அதிகாரம் நீதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (ஓ-எ)

## வேலைக்குத் திரும்ப உத்தரவு

கொழும்பு, டிச. 6
தென் மாகாணத்தில் பணி புரியும் அரசு ஊழியர்கள் இன்று (செவ்வாய்) வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

வேலைக்குத் திரும்பாதோர் வேலையில் இருந்து விலகிவிட்டதாகக் கருதப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

தென் மாகாண முதல் அமைச்சர் எம். எஸ். அமரசிறி தலைமையில் நேற்று நடந்த பாதுகாப்புக் கூட்டத்தைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. (ஓ-எ)

### 6ஆம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை:

## சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்றார்!

யாழ்ப்பாணம், டிச 6
ஆறாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர் ஒருவர் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

கே. சாகரலிங்கம் என்ற பிரஸ்தாப மாணவன் 191 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்திலும் அகில இலங்கையிலும் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படி பரீட்சையில் யாழ். இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த எஸ். சாண்டீபன் யாழ் மாவட்டத்தில் இரண்டாவது இடத்தையும், சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பி. குணரட்ணம் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றிரவு 9 45 மணியளவில்

## கோவில்வீதியில் கொள்ளையர் மக்கள் பெரும் கூச்சல்

யாழ்ப்பாணம், கோவில் வீதியில் நேற்றிரவு சுமார் 9-45 மணி அளவில் பெரும் கூச்சலும், தகரங்களில் அடிக்கும் சத்தமும் கேட்கத் தொடங்கின.

அப்பகுதியில் கொள்ளையர்கள் நடமாடியதை கண்டே மக்கள் கூச்சல் இடத் தொடங்கினர்.

கூச்சலைத் தொடர்ந்து அப்பகுதியைச் சேர்ந்த பலரும் பொல்லுகள் சகிதம் ஒழுங்கைகளில்தேடுதலில் இறங்கினர்.

# பிரேமாவுடன் அமிர்-சம்பந்தன் இரண்டு மணி நேரம் பேச்சு

## ஜனாதிபதியையும் சந்தித்தனர்

கொழும்பு, டிச 6
தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. அ. அமிர்தலிங்கம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

நாட்டு நிலைமை தொடர்பாகவே இந்தப் பேச்சுவார்த்தையில் முக்கியமாக ஆராயப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டணியின் ஆதரவு, நிலைப்பாடு போன்ற விடயங்களோடு சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைக்கான புதிய அணுகுமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமருடனான இந்தச் சந்திப்பு வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீத் வீட்டில் நடைபெற்றது.

இதே வேளையில், கூட்டணித் தலைவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஜனாதிபதி அரசியலிலிருந்து ஓய்வுபெற இருப்பதால் மேற்படி சந்திப்பு ஒரு பிரியாவிடைச் சந்திப்பாகவே இருந்ததாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்பட்டது.

கூட்டணித் தலைவர்கள் இரண்டு வார காலம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள் ஹோல் செற், Show Case, கண்ணாடி மேசை, நேசறி மேசை, பெற்றோல்மெக்ஸ் Baby Cot, சட்டியில் Singer Hand Machine மற்றும் பல உடன் மலிவுவிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென், பற்றிக்ஸ் சந்தி அருகாமையில்) (7797)

Vespa ஸ்கூட்டர் 9 Sri தொடர், Honda-101 Sri தொடர் C 90) Sanyo T. V 27" Canon மோட்டார் (ஓட்டமெற்றிக்) A - 1, AE - 1 கமராவுக்கு பொருந்தக் கூடியது. மினியஸ்சிற்கு பொருந்தக்கூடிய 24 W Fan இரண்டும் விற்பனைக்கு உண்டு தொடர்பு: A தியாகராசா, 16, விதானையார் ஒழுங்கை, சுண்டிக்குளி, (8036)

## விற்பனைக்கு

புரொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சில்லறை விலை கிலோ 40/- தொடர்பு; அ. யோகானந்தா, தபால் நிலைய அருகில் சாவகச்சேரி. (8025)

## குணக்கன் தேவை

லண்டனில் Accountancy படித்துக் கொண்டிருக்கும் 25 வயதுள்ள இந்து வேளாள குல மெல்லிய சிவந்த நிறமுள்ள அழகிய பெண்ணுக்கு 33 வயதிற்குட்பட்ட டாக்டர், பொறியியலாளர், கணக்காளர் அல்லது பகுதி படித்துள்ள கணக்காளர் தரத்திலுள்ள லண்டன் அல்லது கனடாவில் உள்ள மணமகன் தேவை. விண்ணப்பிக்கவும் 400, C/o உதயன். (8034)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/307)

## Advanced English

புதிய பிரிவு ஆரம்பம் 11-12-88, சனி ஞாயிறு நாட்களில். நேரம் 2 மணி - 4 மணி. S B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (7787)

## சமூகக்கல்விப் பயிற்சி

ஆண்டு 11, 10, 9, 8, 7, 6 வகுப்புக்குரிய சமூகக்கல்விப் பயிற்சிகள் - வினு விடைகள் - வெளிவந்து விட்டன. ஆக்கியோன்: க. குணராசா - எம் ஏ. விற்பனையாளர்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7715)

## காணவில்லை

ரஜப் என்னும் 12 வயதுடைய சிறுவன் காணாமற்போய் விட்டார். இவர் கறுப்பு நிறமும் கட்டையான தோற்றமும் உடையவர். இவரைக் கண்டால் பத்ரீன்ஸ், ஜும்மா மொஸ்கலேன் எனனும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். இதனையிட்டுஇவரது அப்துல் மஜீத் அபயா கண்ணீர் வடிக்கிறார். (7800)


## மாந்தை கிழக்கு பிரதேச சபை
## கேள்வி விளம்பரம்

மாந்தை கிழக்கு பிரதேச சபையின், பாண்டியன்குளம் சந்தை, சந்தைக்கடைகள் ஆகியவற்றை 1-1 1989 தொடக்கம் குத்தகைக்கும், வாடகைக்கும் எடுத்து நடாத்துவதற்கான கேள்விகள் 15-12 88 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான கேள்விப் படிவத்தை மாந்தை கிழக்கு பிரதேச சபை அலுவலகத்தில் 14-12-88 பி. ப. 3-30 மணிவரை உரிய கட்டணத்தையும் வைப்புப் பணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் மாந்தை கிழக்கு பிரதேசசபை காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். விபரமான உள்ளூர் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

எஸ். சுந்தரன்
விசேட ஆணையாளர்.
(C-470) மாந்தை கிழக்கு பிரதேச சபை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. கனகையா ஆனந்தராசா

அன்புத் தெய்வமே!
மலருடி வேண்டி நின்றோம் மறுத்திட்டார் வஞ்சகர்கள்
சென்றதோ வருடம் ஒன்று தவிக்குது எங்கள் நெஞ்சம்
புன்சிரிப்பின் புகலிடம் போன இடம் சொல்லையே ?

5-12-88இல கீரிமலையிலும், 6-12 88இல் கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலும் ஆத்ம சாந்திக் கிரியைகள் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்களை அன்னாரின் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பெற்றோர் சகோதரர்கள்,
மற்றும் குடும்பத்தினர்.

'மிதிலை'
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
7792)

# வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
# கல்வியாண்டு-1989/90

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

- கலைமாணி B.A.
- விஞ்ஞானமாணி B.Sc
- வணிகமாணி B.Com

க. பொ. த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்

இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்து இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/ தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய பிரிவு விரிவுரைகள்
10 12-1988இல் ஆரம்பமாகின்றன.

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-880)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திரு வயிரமுத்து கார்த்திகேசு

(இளைப்பாறிய ஆசிரியர்— வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம்)

| தோற்றம: | மறைவு: |
|---|---|
| 28- 11- 1909 | 06- 12- 1987 |

எழுத்தறிவித்து, வளர்த்தெடுத்து, வளமாக வாழ வழி காட்டி, நல்லாசிரியனாய், நற்சிவதொண்டனாய் சமய, சமூகத் தொண்டாற்றி வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன பாதாரவிந்தங்களில் இன்புற்றிருக்கும் எமதன்பு ஆசானே! தங்கள் இறுதி நாட்களில தங்களுடன் உடனிருக்க முடியாமற்போன பிள்ளைகள் தவிக்கிறார்கள். ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறார்கள்.

தங்கள் பிரிவால்துயருறும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,
(8053)

# மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் ஐயாத்துரை சிவசம்பு

| தோற்றம் | மறைவு: |
|---|---|
| 26- 09- 1927 | 09- 12- 1985 |

திதி: 06- 12 1988

உங்கள் ஆத்மா சாந்தியடைவதற்கு இறைவனைப் பிரார்த்திப்பதைத் தவிர உங்களுக்கு எந்தக்கடமையும் செய்ய முடியவில்லையே என்று வேதனையுறும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் சகோதரர்,
பேரப்பிள்ளைகள்.

இரத்தின வில்லா,
குராவத்தை,
சுன்னாகம்.
(8173)

+
J. M. J
உங்கள் பயண அமைப்பாளர்




- கனடா
- ஜேர்மனி
- பிரான்ஸ்
- சுவிஸ்
- இத்தாலி

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றனர் என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றோம். எமது குழுக்கள் பிரதிவாரமும்

**கனடா, ஜேர்மனி, பிரான்ஸ்**

ஆகிய நாடுகளுக்கு

எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.
இது ஓர் அரிய சந்தர்ப்பம்

எனவே விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன் அழைக்கின்றேன்


● முக்கிய குறிப்பு:
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்

# S. P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(சப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
(C/856)

# இதோ சிங்கர் வழங்கும்
# சீமா டயல் தராசு



- பொருளைப் போட்டதுமே எடையை அறியலாம்.
- இரு பக்கமும் தெரியும் எண் சுட்டுக் குறியீடுகள்
- சுழற்றக்கூடிய, துருப் பிடிக்காத பொருள் தட்டு.
- துருப்பிடிக்காத உருக்குத் தட்டுத் தாங்கியும் பலமான பிளாஸ்டிக் நிலைச்சட்டமும்.

சீமா பெடஸ்டல் தராசு
(மேசையில் வைப்பது)
மொடல் C 6 TP
அளவுத் திறன்-6 கி.கி. X 20 கி. விலை: ரூ. 2,150/-





சீமா டயல் தராசு
(தொங்கவிடுவது)
மொடல் C 6 H
அளவுத் திறன்-6 கி.கி. x 20 கி. விலை: ரூ.1,790/-
மொடல் C 15 H
அளவுத் திறன் – 15 கி. கி. X 50 கி. விலை: ரூ. 1,980/-

ஒரு வருடத்திற்குப் பூரண உத்தரவாதம். இலங்கை அளவை-நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரை பெற்றவை. சிலோன் வேயிங் மெஷின்ஸ் லிமிட்டெட் உற்பத்தி.

Minds/SA/6

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்களானது.

விவசாயப் பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.

**பொருள்:**

அன்பு மிகுதியால் பருகுவார் போல் தோன்றினும் நற்பண்பு இல்லாதவரின் நட்பு, வளர்ந்து பெருகுவதைவிடத் தேய்ந்து குறைவது நல்லது.


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலை

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24C05 / 22073
யாழ்ப்பாணம்.
06-12-1988 த. பெ. இல 23


# மாநகர ஆணையாளரின் வேண்டுகோள் ஒன்று

யாழ்ப்பாண மாநகரில் புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு, நகரின் வரியிறுப்பாளர்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டியுள்ளார் புதிய ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட்.

வரியிறுப்பாளர்கள் தமது வரிப்பணத்தை உரிய காலத்தில் செலுத்த வேண்டும். வரி நிலுவை உள்ளவர்கள் தமது நிலுவைப் பணத்தை உடன் செலுத்த வேண்டும். அப்போது தான் வரியிறுப்பாளர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதோடு, நகர அபிவிருத்திக்கு வேண்டிய புதிய திட்டங்களையும் ஆரம்பித்துச் செயற்படுத்த முடியும் இவ்வாறு புதிய ஆணையாளர் உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு அடுத்த அபிவிருத்தி அடைந்த இரண்டு நகரங்களில் கண்டியுடன் யாழ்ப்பாணமும் ஒன்றாக விளங்கியது பலரும் அறிந்த ஒன்று. ஆனால் இப்போது......?

யாழ்ப்பாண நகரம் மட்டுமன்றி வடக்கு கிழக்கில் உள்ள சகல பிரதான நகரங்கள், பட்டினங்கள் யாவுமே அபிவிருத்தி எதுவும் இன்றிப் பின்தங்கி உள்ளன பூவும் பொட்டும் இழந்த கைம்பெண்களாய்க் காட்சி தருகின்றன. தங்கள் பரிபாலனத்தில் காட்டிய வேற்றுமை, புறக்கணிப்பு, பாரபட்சம் என்பவற்றின் விளைவே அதுவாகும். சிங்களப் பிரதேசங்களை இந்திரலோகங்களாக பல வசதிகளும் கொண்ட பகுதிகளாக உருவாக்கிய அதேவேளை, தமிழ்ப் பகுதிகளை பாழடைந்த பிரதேசங்களாக உருக்குலைத்த 'சாதனையை' நிலைநாட்டியதில் எல்லாச் சிங்கள அரசுகளுக்கும் பங்கு உண்டு.

அது போதாது என்று இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ்ப் பிரதேசங்கள், பட்டினங்கள் சுடுகாடுகளாக உருமாற்றப்பட்டுள்ளன மக்களுக்கு இருந்த பல வசதிகளும் சீரழிக்கப்பட்டுள்ளன

ஆகையால், தமிழ்ப் பகுதிகளில் உள்ள பிரதான நகரங்களையும், பட்டினங்களையும் மீளக்கட்டி எழுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மக்களுக்கு உரிய வசதிகளை உண்டாக்கப் புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

யாழ்ப்பாண மாநகரைப் பொறுத்தவரையில் மக்களின் சுகாதாரம், போக்குவரத்து, வீடமைப்பு உட்பட தண்ணீர், மின்சாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளிலும் மக்களுக்குப் பல வசதிகள் செய்யப்பட வேண்டி உள்ளன. அவற்றுக்காகப் பல புதிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதும் கண்கூடு.

முதலில் மக்களுக்கு உரிய வசதிகளைச் செய்வதற்கேனும், மாநகர சபைக்கு வருவாய் வேண்டும் வருவாய் என்பது வரியிறுப்பாளரிடம் இருந்தே சேர வேண்டியது. ஆகையால் வரியிறுப்பாளர்கள் தமது வரிப்பணத்தைச் செலுத்தித் தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் விடுத்திருக்கும் வேண்டுகோள் ஆதரவளிக்கப்பட வேண்டியதாகும். வரியிறுப்பாளர் தாம் செலுத்த வேண்டிய வரிகளையும், கட்டணங்களையும் நிலுவையாக விடாமல் உரிய காலத்தில் செலுத்தி ஒத்துழைக்க வேண்டும்

அரசாங்கத்திடம் இருந்து கிடைக்க வேண்டிய சகல நிதிகளையும், வலியுறுத்திக் கேட்டுப் பெற்றுக் கொள்வது ஆணையாளரின் பொறுப்பு எனபதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

வரியிறுப்பாளர்கள் தமது கொடுப்பனவுகளைத் தவறாமல் செய்தால், ஆணையாளருக்கு அரசை நெருக்கக்கூடிய தைரியமும் துணிச்சலும் வரும் என்று நம்பலாம்.

## ஆனைக்கோட்டையில் 15 குடிசைகள்

குருநகர் டிச 6

ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதி, மாட்டொழுங்கை, முள்ளிப் பகுதியில் 15 சிறு குடிசை வீடுகளை யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே இவ்வருட முற்பகுதியில் பத்துக் குடிசை வீடுகளை அப்பகுதியில் நடுநிலையம் அமைத்துக் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (சி-51)

### தமிழக சட்டசபைத் தேர்தல்: முதல்வர் யார் என்பது தேர்தலுக்குப் பின்பு அறிவிப்பு

# காங்- அ. தி. மு. க. (ஜெ) கூட்டு முடிவு?

சென்னை, டிச 5

தமிழக சட்ட சபைத் தேர்தலுக்கு கட்சிகளிடையே கூட்டணி அமைக்கும் வேலை கிட்டத்தட்ட முடிவடைந்து விட்டது. குறிப்பாக காங்கிரஸும், அ. தி. மு. க (ஜெ)யும் கூட்டணியாக தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு உருவாகி உள்ளது.

தமிழகத்தில் வரும் ஜனவரி மாதத்தில் சட்டசபை தேர்தல் நடக்கும் என்று உறுதியாகி விட்டது

இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் அணி சேர்ந்து தேர்தலைச் சந்திக்க தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன

இந்திரா காங்கிரஸுடன் ஜெயலலிதா அணி கூட்டணி ஏற்படுத்திக் கொள்ள முடிவாகி விட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்விரு கட்சிகளுடன் யூனியன் முஸ்லிம் லீக், அ. தி. மு க. (நெ), இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சி, கிறிஸ்தவ ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகள் தொகுதிகளைப் பங்கீடு செய்து கொண்டு போட்டியில் இறங்கத் தயாராகி விட்டன.

தி.மு.க. கூட்டணியில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும், தமிழ்நாடு பார்வார்டு பிளாக், அப்துல் லத்தீப் தலைமையிலான முஸ்லிம் லீக், ஜனதா தளம் (வி.பி.சிங் கட்சி) ஆகிய கட்சிகள் இணைகின்றன.

அ. தி. மு. க. (ஜா) கட்சி தலைமையில் சிவாஜி கணேசனின் கட்சி, அகில இந்திய பார்வார்டு பிளாக், தி. மு. க. வை விரும்பாத ஜனதா கட்சி போன்ற கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன.

கடந்த முறை நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் தி மு. க. தலைமையில் ஒரு கூட்டணியும் எம் ஜி. ஆர். தலைமையில் ஒரு கூட்டணியுமாக நேருக்கு நேர் போட்டியிட்டன.

எம்.ஜி ஆர். மறைந்த பிறகு அ தி மு க மூன்றாக சிதறி விட்டதால் இந்த தேர்தலில் கூட்டணியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

முதல்வர் பதவியைப் பொறுத்தவரையில் போட்டியில்லாததால் தி மு. க. கூட்டணி ஏற்படுவதிலும் அ தி மு க. (ஜா) கூட்டணி ஏற்படுவதிலும் பிரச்சினை இல்லாமல் இருந்தது.

காங்கிரஸுடன் கூட்டணி இல்லை என்று ஜானகி பகிரங்கமாக அறிவித்து விட்டார்.

### காங்கிரஸ் ஜெ கூட்டணி

ஜானகி அணியினர் காங்கிரஸ் அணிக்கு வரவில்லை என்று அறிவிப்பு வந்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் அ தி மு.க. (ஜெ) கட்சிகளுக்கிடையே மறு சிந்தனை தோன்றியது. இவ்விரண்டு கட்சிகளும் கூட்டணி அமைத்துக்கொள்வது நல்லது என்ற பரஸ்பர எண்ணம் ஏற்பட்டது

அதனை ஒட்டி ஜெயலலிதாவின் தூதர்கள் சிலர் டில்லியில் காங்கிரஸ் தலைவர்களுடன் கூட்டணி பேச்சைத் தொடங்கினர் இந்தப் பேச்சில் இப்பொழுது இறுதிமுடிவு ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

ஜெயலலிதா கட்சிக்கும், காங்கிரசுக்கும் கூட்டணி வேண்டும் என்று கூறி வந்த திரு நாவுக்கரசு இப்பொழுது ஜெயலலிதா அணிக்குத் திரும்பிவிட்டதும் காங்கிரஸ் - ஜெயலலிதா அணி முடிவாகி விட்டதன் அடையாளம் தான் என்றும் கூறப்படுகிறது

இப்பொழுது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் காங்கிரஸ்- அ தி.மு க (ஜெ) கட்சிகளுடன் யூனியன் முஸ்லிம் லீக், எம். கல்யாணசுந்தரம் தொடங்கிய இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சி, கிறிஸ்தவ ஜனநாயக முன்னணி. குடியரசுக் கட்சி ஆகியவை ஓரணியில் நிற்கும். காங்கிரஸ் பெரும்பான்மைத் தொகுதிகளில் போட்டியிடும் என்று தெரிகிறது.

### தி. மு. க. அணி

தி. மு. க. கூட்டணியைப் பொறுத்த வரையில் சில மாற்றங்களுடன் பழைய கூட்டணியே அமைந்துள்ளது அந்த அணியில் இருந்து யூனியன் முஸ்லிம் லீக் விலகி விட்டாலும் அப்துல் லத்தீப் தலைமையில் உள்ள லீக் இந்தக் கூட்டணியில் இடம்பெறும்

தி மு. க. உறவை விரும்பாத (பொன் விஜயராகவன் தலைமையில் உள்ள) ஜனதா கட்சியும், ஜானகி தலைமையிலான கூட்டணியில் இடம்பெறுகிறது.

இந்தக் கூட்டணி பற்றிய ஏற்பாடுகள் முடிந்து விட்டன என்றாலும் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் வெளிப்படையான கூட்டணி அறிவிப்புகள் வெளிவரும். (எ-4)

## ராய்ட்டர் நிருபர் மீது தாக்குதல்

ஜெருசலம் டிச 5

ராய்ட்டர் செய்தியாளர் ஸ்டீவ் வீஸ்மன் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசமான மேற்குக் கரையோரத்தில் இச் செய்தியாளரின் வாசஸ்தலம் உண்டு. அதற்கு வெளியே வைத்து இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றது.

அரபுப் பிரதேசத்தில் இரகசியமாக இயங்கும் இஸ்ரவேலிய பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகள் பற்றி செய்திகள் வெளியிட்டதாக இந்த ராய்ட்டர் செய்தியாளருக்கு வழங்கப்பட்ட அனுமதியை இஸ்ரவேல் அரசு இடைநிறுத்தி வைத்து இருந்தது. (எ)

## பதவி ஏற்பு

இஸ்லாமபாத், டிச 5

பிரதமர் பெனாஸிர் பூட்டோ தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்றுப் பதவி ஏற்றது.

23 பேர் கொண்ட அமைச்சரவையில் பெரும்பாலானோர் இளைஞர்கள். (ஒ-எ)

## தயான் விடுதலை

கொழும்பு, டிச. 6

அரசுக்கு எதிராகச் சதிசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. தயான் ஜெயதிலக டீ சில்வா விடுதலை செய்யப்பட்டார்.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இவ்வழக்கு விசாரணைக்குவந்தது.

அப்போது ஜெயதிலக டீ சில்வா உட்பட ஆறு எதிரிகள் மீதான வழக்கைத் தொடர்ந்து நடத்துவது இல்லை என்ற சட்டமா அதிபரின் முடிவு நீதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## சுவரோட்டிகள் குறித்து சர்ச்சை

கொழும்பு டிச 6

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் சுவரொட்டிகள் இரண்டு தேர்தல் சட்டவிதிகளை மீறுவதாக அமைந்துள்ளன என்றுசட்டமா அதிபர் தெரிவித்திருக்கிறார்.

இச் சுவரொட்டிகள் பற்றி ஐ தே.க தலைவர் ரஞ்சன் விஜேரத்ன பொலீஸ் மா அதிபருக்கு முறையிட்டிருந்தார். (உ-எ)

## அரிசி விலை திடீர் உயர்வு

குருநகர், டிச. 6

யாழ் குடாநாட்டில் அரிசியின் விலை திடீரென உயர்ந்துள்ளது.

ரூபா 580 முதல் ரூபா 650 வரை விலையுள்ள ஒரு மூடை அரிசி இப்பொழுது ஆயிரம் ரூபாவில்இருந்து ஆயிரத்து நூறு ரூபாவரை உயர்ந்துள்ளது. (ச-51)

### ரூபா 1,000 நிவாரணம்:

# 15,000 குடும்பங்களுக்கே இதுவரை வழங்கப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணம், டிச6

இடம் பெயர்ந்தகுடும்பங்களுக்கான மீளக்குடியமர்தல் நிவாரணமான ஆயிரம் ரூபா இதுவரை சுமார் 15 ஆயிரம்குடும்பங்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்னும் 60 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த நிவாரணம் ஒதுக்கப்பட வேண்டியுள்ளது.

யாழ் செயலக வட்டாரங்கள் இந்தத்தகவலைத் தெரிவித்தன.

கடந்த வருட இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின்கீழ் மீளக் குடியமர்தல் நிவாரணமாக 2 ஆயிரம் ரூபா வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்காக புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதி போதாமையினால் முதல்கட்டமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதாக முடிவு செய்யப்பட்டது.

இதன்படி இதுவரை சுமார் 15 ஆயிரம் குடும்பங்களுக்கே நிவாரணப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது

மேலும் 60 ஆயிரம் குடும்பங்களுக்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் போதிய நாள் அவகாசம் இன்மையால் இது தடைப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரச அதிகாரிகள்

## சொத்து பற்றிய பிரகடனத்தை ஆண்டுதோறும் வெளியிடவேண்டும்

எல்லா அரசு அதிகாரிகளும் ஆண்டுதோறும் தங்களுக்குரிய சொத்துக்கள் பற்றிய பிரகடனத்தை வெளியிட வேண்டும்.

புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள சொத்துக்கள் பிரகடனச் சட்டத்திருத்தச் சட்டமூலத்தில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது

பழைய 1975 ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ்ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்துக்கள் பிரகடனத்தை வெளியிட்டால் போதுமானது. (ஒ-எ)

## ஒத்திவைப்பு

கடலடவேலி- நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்துக்கான கிளைத் தேர்தல் 1989 ஆம் ஆண்டுக்குப் பின்போடப்பட்டுள்ளது (ச-70)

# 'என்ன தான் நடந்தாலும் விட்டுக் கொடோம்'

கொழும்பு, டிச 6

என்னதான் நடந்தாலும் நாம் விட்டுக் கொடுக்கப் போவது இல்லை.

இப்படி நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் விக்ரமபாகு கருணாரத்தின தெரிவித்தார்.

கடந்த வியாழன் கடவத்தையில் நடந்த மக்கள் கட்சிக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் காயமடைந்தவர்களில் இவரும் ஒருவர்.

ஆஸ்பத்திரி வார்ட்டில் சிகிச்சை பெற்றபடி டாக்டர் கருணாரத்தின செய்தியாளரிடம் சொன்னதாவது;

பின்வாங்கும் பேச்சுக்கோ, சரணடைவது என்பதற்கோ இடம் இல்லை. நாம் எதற்கும் விட்டுக்கொடுக்கப் போவது இல்லை. எம் மீது நடத்தப்பட்ட தாக்குதல், நாம் அவர்களுக்கு பயமுறுத்தலாக மாறிவிட்டோம் என்பதைக்காட்டுகிறது

அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எமது பலம் தினமும் பெருகிவருகிறது.

எமது இயக்கத்தின் வளர்ச்சியை நிறுத்த எம்மைக் கொலல முயற்சிகிறார்கள் நாம் பணியப்பபோவது இல்லை-

இப்படி டாக்டர் கருணாரத்தின சொன்னார்.

டாக்டர் கருணாரத்தினவின் வயிற்றைத் துப்பாக்கிக் குண்டு தாக்கியது அவசர சத்திர சிகிச்சையின் பின் அவர் குணமடைந்து வருகிறார் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

# 5 லட்சம் வாக்குச் சீட்டுகள் மேலதிகமாகத் தயார்!

கொழும்பு, டிச 6

ஜனாதிபதித் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எண்ணிக்கைக்கும் அதிகமாக குறைந்தது 5 லட்சம் வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருப்பதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அவசர தேவைகளுக்கு ஆகவும், தவறுதலாக வாக்குச் சீட்டைப் பழுதாக்கி விட்ட வாக்காளருக்கு வழங்குவதற்காகவுமே மேலதிகமாக இவ் வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளன என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன;

மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க மேலதிகமாக 5 சதவீத வாக்குச் சீட்டுக்கள் அச்சிட தேர்தல் ஆணையாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் 93 லட்சத்து 74 ஆயிரத்து 880 பேர் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்வரும் தேர்தலில் பயன் படுத்தப்படுவதற்காக 98 லட்சத்து 43 ஆயிரத்து 624 வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளன. (உ-எ)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# ஆங்கிலக்கலவி வளர்ச்சி கண்டு பெருமிதம் அடைகிறேன்

### கல்வி அதிகாரி பேச்சு

தாளையடி, டிச 6

''கிளிநொச்சி மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களைப்போல ஆங்கிலக் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளதைக் கண்டு பெருமிதமடைகின்றேன்''.

கிளிநொச்சிப் பிராந்திய கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி திரு எஸ். வேலாயுதம் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வைபவம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில், கிளிநொச்சி மாவட்ட ஆங்கில வெளிக்கள திட்ட உத்தியோகத்தர் திரு. ஜே மரியதாசன் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு, என் சோதிநாதன் வட்டக்கச்சி கொத்தணி அதிபர் திரு.ப. அரியரத்தினம், பூநகரி கொத்தணி அதிபர் திரு. கே. பரஞ்சோதி, அக்கிராயன் கொத்தணி அதிபர் திரு இ. சின்னராசா ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

கூடிய சான்றிதழையும், கூடிய புள்ளிகளையும் பெற்றமைக்காக கிளிநொச்சி மத்தியமகா வித்தியாலயத்திற்கு வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது. (ஓ சி-144)

## கிளிநொச்சியில் அரிசிக்குத் தட்டுப்பாடு

தாளையடி, டிச 6

கிளிநொச்சியில அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது இதனையடுத்து அரிசியின் விலை இங்கு அதிகரித்துள்ளது.

மின்சார விநியோகம் தடைப்பட்டதனால் இப்பகுதியில் உள்ள அரிசி மில்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனாலேயே அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (சி 144)

## பாராட்டு

அரியாலையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. த. துரைசசாமி நாயன்மார் கட்டுஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கௌரவிக்கப்பட்டார்.

சிவபூஜாதுரந்தரர் திரு. வே. சிவசுப்பிரமணியம் பாராட்டுப் பத்திரம் வழங்கி திரு. துரைச்சாமியைக்கௌரவித்தார் (ச)

# முஸ்லிம் காங்கிரஸில் கருத்து வேற்றுமை?

கொழும்பு, டிச. 6

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஜனாப். எம். எச். ஜவ்பர் சாதிக் தலைமையில் பல முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கையெழுத்திட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர்.

'சென்ற 30 ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸின் பெரும்பாலான உறுப்பினர்கள் அவசரக் கூட்டம் ஒன்றை நடத்தினர்'.

'ஐக்கியதேசியக்கட்சி, ஐக்கியசோஷலிச அணி, மற்றும் வேறு அமைப்புக்களுடன் பேச்சு நடத்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு காங்கிரஸ் ஆணை வழங்கவில்லை என்றும் அதனால் நடத்தப்பட்டு வரும் பேச்சுக்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது'.

'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கும் என்று இக்கூட்டத்தில் மேலும தீர்மானிக்கப்பட்டது'.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதில் கையெழுத்திட்டுள்ளவர்களில் ஒருவர் மேற்கு மாகாண சபை உறுப்பினரான ஜனாப் சுசய்பு ஏ. காதர். (இ-எ)

## 48பேர் கைது!

கொழும்பு டிச 6

பண்டாரகம, பாணந்துறை பகுதிகளில் ஆயுதப் படையினர் நடத்திய தேடுதலில் 48 தீவிரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் (இ-எ)

## விவசாயிகள் நடவடிக்கை

கரவெட்டி, டிச 6

காலபோக நெற்செய்கைக்கு உரிய மழை பெய்துள்ளதால் கரவெட்டிமேற்கு விவசாயிகள் தமது வயல்-தோட்டக்காணிகளில் கால்நடைகளினால் சேதம் ஏற்படுவதைத் தடுக்க முன்வந்துள்ளனர்.

அத்துடன் விவசாயம் சம்பந்தமான கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள பயிர்ச் செய்கைக் கவனிப்புக் குழு ஒன்றையும் அமைத்துள்ளனர் (ஒ- 70)

## சுடலைமடத்தின் அவல நிலை

சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக்கரைக்கு அருகாமையில் உள்ள சுடலைமடம் அண்மையில் புதிதாகக் கட்டப்பட்டு பாவனையில் இருந்து வந்தது

கடலில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலால கட்டடக் கூரை ஓடுகள் உடைந்துள்ளன.

இதனால் மழை பெய்யும் போது சுடலைக்கு வருபவர்கள் தங்கி நிற்க முடியாமல் உள்ளது. (ச - ரி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஜோண்சன் ✱ JOHNSON
10. H. P, 6%5-H P
வெளியிணை இயந்திரங்களையும்
உதிரிப்பாகங்களையும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்.
10 H. P. விலை: 25,500/—
6% 5 H. P. விலை: 22,000/—
வடபகுதி விநியோகஸ்தர்கள்: சேன். அன்ரனீஸ்
63, யூதாததேயு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

# உதயன்

06 - 12 - 1988 செவ்வாய்க்கிழமை


✱ ஜோண்சன்
வெளியிணை இயந்திரங்கள்
உதிரிப்பாகங்களின்
வடபகுதி விநியோகஸ்தர்கள்
10. H.P விலை. 25,500/-
6%.5 H.P விலை:22,000/-
உங்கள் தெரிவுக்கு
எம்மை நாடுங்கள்
சேன். அன்ரனீஸ்.
40, சடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்

## மருத்துவ மாதர் பயிற்சி இவ்வாரம் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், டிச 6

யாழ் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவ மாதர்களுக்கான பயிற்சி இந்த வாரம் யாழ் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

மேற்படி பயிற்சி டிசம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது.

எனினும் கடிதப் போக்குவரத்துத் தடங்கல்கள் காரணமாக அறிவித்தல் கடிதங்கள் நேற்றையதினமே யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தை வந்தடைந்தன.

இந்தப் பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்ட 22 பேருக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (ஒ 5)

யாழ். மாவட்டத்தில்

## 5, 6 ஆம் ஆண்டு மாணவர் 425 பேர் புலமைப்பரிசிலுக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், டிச 6

யாழ். மாவட்டத்தில் ஐந்தாம், ஆறும் ஆண்டு மாணவர்கள் 425 பேர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தெரிவாகியுள்ளனர்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் உள்ள 75 பாடசாலைகளைச் சேர்ந்த 215 மாணவர்களும்—

ஆறும் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் 46 பாடசாலைகளைச் சேர்ந்த 207 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 215 மாணவர்களில் 140 மாணவர்கள் தாம் விரும்பிய பாடசாலையைத் தெரிவு செய்யவும் 7 மாணவர்கள் உபகாரச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளவும் 68 மாணவர்கள் உபகாரச் சம்பளத்தையும், விரும்பிய பாடசாலையைத் தெரிவு செய்யவும் முடியும்.

மேற்படி பரீட்சையில் யாழ் இந்துக்கல்லூரி ஆரம்பபாடசாலையைச் சேர்ந்த 19 மாணவர்களும் செல். ஜோன் பொஸ்கோவைச் சேர்ந்த 18 மாணவர்களும், சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த 10 மாணவர்களும் உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 10 மாணவர்களும், தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த 8 மாணவர்களும், தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியைச் சேர்ந்த 6 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆறும் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 207 மாணவர்களில் 131 மாணவர்கள் தாம் விரும்பிய பாடசாலையைத் தெரிவு செய்யவும், 57 மாணவர்கள் உபகாரச் சம்பளத்தை பெற்றுக்கொள்ளவும், 19 மாணவர்கள், உபகாரச்சம்பளத்தையும் விரும்பிய பாடசாலையையும் தெரிவுசெய்ய முடியும்.

மேற்படி பரீட்சையில் யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பப்பாடசாலையைச் சேர்ந்த 37 மாணவர்களும், ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த 24 மாணவர்களும், சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த 16 மாணவர்களும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 13 மாணவிகளும், உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 11 மாணவிகளும், வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 10 மாணவிகளும், இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரியைச் சேர்ந்த 7 மாணவர்களும், சுதுமலை சின்மயா பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த 6 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளின் அதிபர்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் தமது பாடசாலைகளுக்குரிய பரீட்சை முடிவுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

### ஜப்பானிய மன்னரின் நிலை மோசம்

டோக்கியோ, டிச 6

ஜப்பானிய மன்னர் ஹிரோஹிட்டோவின் உடல்நிலை அபாய கட்டத்தை அடைந்திருந்ததாக நேற்று அறிவிக்கப்பட்டது.

87 வயதான இவர் உலகில் நீண்டகாலமாக ஆட்சி செய்துவரும் மன்னராவார்.

இவருக்குநேற்று இரத்தப்பெருக்கு ஏற்பட்டதாகவும் உடனடியாக புதிய இரத்தம் ஏற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

### சு. க. மீண்டும் முறையீடு

கொழும்பு டிச 6

பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையிலும் பார்க்க மேலதிகமாக 5 லட்சம் வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்படுவது குறித்து சுதந்திரக் கட்சி தேர்தல் ஆணையாளருக்கு மீண்டும் முறையிட்டுள்ளது, (ஒ-எ)

### பர்னாலா ராஜினமா

சண்டிகார், டிச 6

பஞ்சாப் முன்னாள் முதலமைச்சர் சுர்ஜித் சிங் பர்னாலா அகாலிதள் கட்சியின் லோங்கோவால் பிரிவின் தலைவர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்துவிட்டார்.

கட்சியின் காரியக் கமிட்டியையும் திரு. பர்னாலா கலைத்துவிட்டார் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### அலுவலகம் குண்டு வைத்துத் தகர்ப்பு

கொழும்பு, டிச 6

அனுராதபுரத்தில் உள்ள பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் சடந்த சனிக்கிழமை இரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

வவுனியாவில் சம்பவம்:

## நிலக்கடலைப் பயிருக்கு காவலுக்கு இருந்தவர் மீது சூடு!

இராசேந்திரன் குளம் கிராமத்தினுள் புகுந்த நான்கு ஆயுதபாணிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கணபதிப்பிள்ளை ஜேசுதாசன் (39 வயது) என்பவர் படுகாயம் அடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவதினம் தனது வீட்டின் வெளிப்புறத்தில் நிலக்கடலைப் பயிர்களுக்கு காவலாக தாம் படுத்திருந்ததாகவும் இரவு 10 30 மணி அளவில் தமது வீட்டை நோக்கி வந்த நால்வர் மீது சந்தேகம் கொண்டு யாரது என்று அதட்டிக் கேட்டதாகவும் அவர்களில் ஒருவர் சிங்களத்தில் பேசியபடி திடீரென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், நிலத்தில் உருண்டு தலையில் படுகாயத்துடன் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் அவர் தெரிவித்தார். (இ-164)

### மூவர் பலி

இருதினங்களுக்கு முன் மன்னார், குஞ்சுக்குளம் பகுதியில் அமைதிப் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது இடம் பெற்ற மோதலில் மூன்று புளொட் உறுப்பினர்கள் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-164)

### 17 இடங்களுக்கும்....

(1ம்பக்கத் தொடர்ச்சி)

எடுத்து வருவதாகவும் பி. பி சி செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மாகாணசபைத் தேர்தல் சமயம் பயமுறுத்தல் இருந்தது. அதன் காரணமாக படித்த முஸ்லிம்கள் வேட்பாளர் பட்டியலில் தங்கள் பெயர் இடம் பெறுவதை விரும்பாது இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### சென். ஜோன்ஸ்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சையில் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த செல்வி கே. துசியந்தி, தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியைச் சேர்ந்த வை. சிவராம் ஆகியோர் முறையே யாழ் மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளனர்

மேலும் காரைநகர் யாழ்றன் கல்லூரியைச் சேர்ந்த எஸ் சுதர்ஸன் யாழ் மாவட்டத்தில் மூன்றும் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் ஆறும் இடத்தையும் பெற்றுள்ளார். (ஒ-5)

### 54 உறுப்பினர்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படி ஆளுநர் நளின் செனவிரத்தின தெரிவித்தார்.

பதவிப் பிரமாணம் செய்துகொண்ட 54 உறுப்பினர்களில் 37பேர் ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் —

17 பேர் ஈ. என். டி. எல் எப். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ எ)

### அமைச்சுகளின்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி, விவசாய அமைச்சர்.

5 ஜனுப். அபுயூசுப்:- கைத்தொழில் போக்குவரத்து அமைச்சர்,

முதலமைச்சராக திரு. வரதராஜப்பெருமாள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்.

மறுநாள் சனிக்கிழமை திருமலையில் ஆளுநர் முன்னிலையில் அமைச்சர்கள் பதவியேற்பர். (இ-எ)

### கூட்டம்

யாழ்ப்பாணம், டிச 6

யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகளின் கூட்டம் ஒன்று 8 ஆம் திகதி காலை 9 மணியளவில் யாழ். கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கோட்டக்கல்வி அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (ஒ 5)

### பிரேமாவுடன்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை கொழும்பில் தங்கியிருப்பார்கள்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சித் தலைவர் திரு. ஒஸி அபேயகுணசேகர ஆகியோரையும் கூட்டணித் தலைவர்கள் சந்திப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சவூதி அரேபியாவுக்கு
உடனடி வேலைவாய்ப்பு

| | சம்பளம் |
|---|---|
| 40 பேர் கனரக சாரதிகள் (H V Drivers) | 750 SR |
| 200 பேர் கிளீனேர்ஸ் | 400 SR |

| | |
|---|---|
| வயதெல்லை சாரதிகளுக்கு | 24-45 வரை |
| கிளீனேர்ஸ் வயதெல்லை | 21-45 வரை |

பத்து (10) நாட்களுள் பயணம்.
கடவுச்சீட்டுடன் மூன்று கடவுச்சீட்டு சைஸ் போட்டோக்கள்.

உடன் தொடர்பு கொள்ளவும்.

T. V. TRAVELS & TOURIST
BROWN ROAD
(Railway Station Front)
KOKUVIL
(C-876)

## திருமண அழைப்பிதழ்

நிகழும் விபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 26ஆம் நாள் [11-12-88] ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் வரும் சுப வேளையில்

| எமது சகோதரன் | எமது புதல்வி |
|---|---|
| **சிறிஸ்கந்தராஜா** | **கலாரஞ்ஜனி** |
| [கமத்தொழில் காப்புறுதிச் சபை, மன்னார்] | |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரும் வேண்டப்படுகின்றார்கள்.

திரு. திருமதி துரைராஜா
நெற்கொழு வீதி,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

திருமதி சி. தம்பிரத்தினம்
மாதாகோவில் வீதி,
பொலிகண்டி.

(8171)

## மரண அறிவித்தல்கள்

### யோகநாதன் ரவிசங்கர்

யோகநாதன் ரவிசங்கர் காலமானார் இவர் யோகநாதன் (யாழ். மனோகரா படமாளிகையின் முன்னாள் பங்காளரும், முன்னாள் முகாமையாளரும்), தவமணிதேவி (மல்லிகா) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் ரவிச்சந்திரன் (இத்தாலி), நிர்மலா, வத்சலா, ரவீந்திரன், கவுசலா (கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தம், குணம், பஞ்சு, கலா, சுப்பலச்சுமி ஆகியோரின் பெருமகனும் சற்குணபாலதேவி (பவளி), சந்திரபாலதேவி (சாந்தி) தவலிங்கம், சிவலிங்கம் (இத்தாலி) ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற பவளக்கால் நடராசா, கனகம்மா, செல்லம்மா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் C M S Lane, கொக்குவில் மேற்கு கொக்குவிலில் அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று (6 12-88) 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C. M S Lane,
கொக்குவில். (8175)

தகவல்:
N. யோகநாதன்

### திரு. சி. கணேசரத்தினம்

"இராஜம் கொட்டேஜ்" சில்லாலை வீதி பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு சி. கணேசரத்தினம் 4-12-88 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் பிரபல உள்ளூர்ப் பிரமுகரும் காலஞ்சென்ற திரு திருமதி M M. சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மகனும், திரு. கனகசுந்தரம், காலஞ்சென்ற திருமதி கு. கனகம்மா துரைராசா, அருளம்மா, செல்வரட்ணம் (இளைப்பாறிய திட்டமிடல் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் பாங்கொக்), பரிமளம், சோமசுந்தரம் (பிறப்பு, இறப்பு விவாகப்பதிவாளர்), சா. மங்கையர்க்கரசி (இளைப்பாறிய ஆசிரியை), செல்வி பரமேஸ்வரி (ஆசிரியை ம. ம வித்தியாலயம் பண்டத்தரிப்பு) ஆகியோரின் சகோதரனும், குலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), தம்பிஐயா (Muller & Pipps), காலஞ்சென்ற சோமசுந்தரம் (புள்ளி விபர இலாகா கந்தோர்), சாம்பசிவம் (முகாமையாளர் மக்கள் வங்கி ஊர்காவற்றுறை) திருநேசமலர், கமலநாயகி, இராஜேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை பாங்கொக்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நந்தினி, நந்தகுமார், அஜந்தினி (U.K), றவீந்திரன் (Holland), றதிக்கா, சுகல்ஜன் (இந்தியா) குகல்ஜன் (மட்ராஸ்), தயோதரன் (சவூதி), தமயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிறின்ஸ் (U K) ரேயல், குயினி (ஆசிரியை முல்லைத்தீவு), ரேகினி, சசிலேகா (பிரான்ஸ்), கிங், டியூக், சசிசரன், சசிலன், சிவாந்தி, வற்சலா (அமெரிக்கா) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5-12-88 திங்கட்கிழமை நடைபெற்றது. அத்தருணம் சமுகமளித்தவர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்:
—குடும்பத்தினர்

(8052)

### திரு. சபா. சுப்பிரமணியம்

சிறீ முருகன் பாம் உரிமையாளர் திரு. சபா. சுப்பிரமணியம் அவர்கள் நேற்று 5-12-88 இல் காலமானார் அன்னாரின் பூதவுடல் அட்டலவாணர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக 6 12 88 செவ்வாய் பிற்பகல் ஒரு மணியளவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் தருபவர்
க. கதிரமலை

சிறீ முருகன் பாம்,
மருதனுமடம். (8179)

### திருமதி இராசதுரை சிவயோகம்

திருமதி இராசதுரை சிவயோகம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும் இரஞ்சிதமலர், லோகேஸ்வரி, இரத்தினேஸ்வரன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), செந்தமிழ்ச்செல்வி, சாந்தநாயகி, வதனி என்போரின் அருமைத் தாயாரும், நாகராசா (U. K), சிவதாசன், அமுதினி என்போரின் அருமை மாமியாரும், ஜனனி ஆரணி என்போரின் பேத்தியாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், பரஞ்சோதிநாதன் (மன்னார் ஜோதிவிலாஸ் உரிமையாளர்), திருமதி மகேஸ்வரி செல்வராசா என்போரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31, மானிப்பாய்வீதி இல்லத்தில் இருந்து 6-12-88 பிற்பகல் 1 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். (C131)

### திரு. சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

புத்தூர் சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை (இளைப்பாறிய விதானையார் J. P.) காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், நவரத்தினவேல் (பொறியியலாளர் - சடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்), நவரத்தினமணி, நவராணி, நவரத்தினராசவேல் (ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. யோகாம்பிகை (கண்ணாஸ்பத்திரி கொழும்பு), காலஞ்சென்ற பரமசிவம் (இளைப்பாறிய எஸ்டேட் சுப்பிரின்டன்), காலஞ்சென்ற சிறீராமச்சந்திரன், குகனேஸ்வரன், கங்காதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சி. தாமோதரம்பிள்ளை (பொலிஸ் சார்ஜன்ட்), காலஞ்சென்ற திருமதி இராமநாதன், திருமதி காசிநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரகுலன், ராகவன், ரவீந்தன் (பரியோவான் கல்லூரி மாணவன்) சங்கீதா, நிரோசிகா, நந்தகுமார், தனிக்குமார், பிரணவன், பிரதீபன், செந்தூரன், ஞானேந்திரன், தனலோசினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 7-12-88 புதன் 2 பி. ப. புத்தூர் சிந்துசிட்டியில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. நவரத்தினராசவேல்

(8051)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 6th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org